ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 1.2 – வண்ணமாடங்கள்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 1.2 – வண்ணமாடங்கள்

‡ வண்ண மாடங்கள் சூழ் ⋆
திருக்கோட்டியூர் ⋆
கண்ணன் கேசவன் ⋆
நம்பி பிறந்தினில் ⋆
எண்ணெய் சுண்ணம் ⋆
எதிர் எதிர் தூவிடக் ⋆
கண்ணன் முற்றம் ⋆
கலந்தளறாயிற்றே ‖ **1.2.1** ‖

ஓடுவார் விழுவார் ⋆
உகந்தாலிப்பார் ⋆
நாடுவார் நம்பிரான் ⋆
எங்குற்றான் என்பார் ⋆
பாடுவார்களும் ⋆
பல் பறை கொட்டநின்று ⋆
ஆடுவார்களும் ⋆
ஆயிற்றாய்ப் பாடியே ‖ **1.2.2** ‖

பேணிச் சீருடைப் ⋆
பிள்ளை பிறந்தினில் ⋆
காணத் தாம் புகுவார் ⋆
புக்குப் போதுவார் ⋆
ஆண் ஒப்பார் ⋆

இவன் நேர் இல்லை காண் ⋆
திருவோணத் தான் ⋆
உலகாளும் என்பார்களே ॥ **1.2.3** ॥

உறியை முற்றத்து ⋆
உருட்டி நின்றாடுவார் ⋆
நறு நெய் பால் தயிர் ⋆
நன்றாகத் தூவுவார் ⋆
செறிமென் கூந்தல் ⋆
அவிழத் திளைத்து ⋆
எங்கும் அறிவழிந்தனர் ⋆
ஆய்ப்பாடி ஆயரே ॥ **1.2.4** ॥

கொண்ட தாளுறி ⋆
கோலக் கொடுமழு ⋆
தண்டினர் ⋆
பறி ஓலைச் சயனத்தர் ⋆
விண்டமுல்லை ⋆
அரும்பன்ன பல்லினர் ⋆
அண்டர் மிண்டிப் ⋆
புகுந்து நெய் ஆடினார் ॥ **1.2.5** ॥

கையும் காலும் நிமிர்த்துக் ⋆
கடார நீர் ⋆
பைய ஆட்டிப் ⋆
பசுஞ்சிறு மஞ்சளால் ⋆
ஐயநாவழித் தாளுக்கு ⋆
அங்காந்திட ⋆

வையம் ஏழும் கண்டாள் ⋆
பிள்ளை வாயுளே ॥ **1.2.6** ॥

வாயுள் வையகம் கண்ட ⋆
மட நல்லார் ⋆
ஆயர் புத்திரன் அல்லன் ⋆
அருந்தெய்வம் ⋆
பாய சீருடைப் ⋆
பண்புடைப் பாலகன் ⋆
மாயன் என்று ⋆
மகிழ்ந்தனர் மாதரே ॥ **1.2.7** ॥

பத்து நாளும் கடந்த ⋆
இரண்டாநாள் ⋆
எத்திசையும் ⋆
சயமரம் கோடித்து ⋆
மத்த மாமலை ⋆
தாங்கிய மைந்தனை ⋆
உத்தானம் செய்து ⋆
உகந்தனர் ஆயரே ॥ **1.2.8** ॥

கிடக்கில் தொட்டில் ⋆
கிழிய உதைத்திடும் ⋆
எடுத்துக் கொள்ளில் ⋆
மருங்கை இறுத்திடும் ⋆
ஒடுக்கிப் புல்கில் ⋆
உதரத்தே பாய்ந்திடும் ⋆

மிடுக்கிலாமையால் ⋆
நான் மெலிந்தேன் நங்காய் ॥ **1.2.9** ॥

‡ செந்நெலார் வயல் சூழ் ⋆
திருக்கோட்டியூர் ⋆
மன்னு நாரணன் ⋆
நம்பி பிறந்தமை ⋆
மின்னு நூல் ⋆
விட்டுசித்தன் விரித்த ⋆
இப் பன்னு பாடல் வல்லார்க்கு ⋆
இல்லை பாவமே ॥ **1.2.10** ॥

அடிவரவு — வண்ணம் ஓடுவார் பேணி உறியை கொண்ட கை வாயுள் பத்து கிடக்கில் செந்நெல் சீதக்கடல்

வண்ணமாடங்கள் முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்